# ஏப்ரல் - 25 - செவ்வாய்

## புனித மாற்கு – நற்செய்தியாளர்

**உமது பேரன்பு என்றென்றும் நிலைத்துள்ளது என்று அறிவிப்பேன்: திபா. 89:2**

**முதல் வாசகம்: 1 பேதுரு5 : 5 – 14**

இளைஞர்களே, நீங்கள் முதியவர்களுக்குப் பணிந்திருங்கள். ஒருவர் மற்றவரோடு பழகும்போது எல்லாரும் மனத்தாழ்மையை ஆடையாய் அணிந்திருங்கள். ஏனெனில், ”செருக்குற்றோரைக் கடவுள் இகழ்ச்சியுடன் நோக்குவார் தாழ்நிலையில் உள்ளவர் களுக்கோ கருணை காட்டுவார்.” ஆகையால், கடவுளுடைய வல்லமைமிக்க கரத்தின்கீழ் உங்களைத் தாழ்த்துங்கள் அப்பொழுது அவர் ஏற்ற காலத்தில் உங்களை உயர்த்துவார். உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடம் விட்டு விடுங்கள். ஏனென்றால், அவர் உங்கள் மேல் கவலை கொண்டுள்ளார். அறிவுத் தெளிவோடு விழிப்பாயிருங்கள். உங்கள் எதிரியாகிய அலகை யாரை விழுங்கலாமெனக் கர்ச்சிக்கும் சிங்கம்போலத் தேடித் திரிகிறது. அசையாத நம்பிக்கை கொண்டவர்களாய் அதனை எதிர்த்து நில்லுங்கள். உலகெங்கிலுமுள்ள உங்கள் சகோதரர் சகோதரிகள் உங்களைப் போலவே துன்பங்களுக்கு உள்ளாகிறார்கள் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் அல்லவா? எல்லா அருளும் நிறைந்த கடவுள், இயேசு கிறிஸ்துவுக்குள் என்றும் நிலைக்கும் தம் மாட்சியில் பங்குகொள்ள உங்களை அழைத்திருக்கிறார். சிறிது காலத் துன்பங்களுக்குப்பின் அவர் உங்களைப் சீர்ப்படுத்தி, உறுதிப்படுத்தி, வலுப்படுத்தி நிலை நிறுத்துவார். அவரது வல்லமை என்றென்றைக்கும் உள்ளது. ஆமென். நம்பிக்கைக்குரிய சகோதரன் என நான் கருதும் சில்வான் வழியாகச் சுருக்கமாக உங்களுக்கு எழுதியுள்ளேன். உங்களை ஊக்குவிக்கவும் கடவுளுடைய மெய்யான அருளைப் பற்றிச் சான்று பகரவுமே எழுதினேன். இந்த அருளில் நிலைத்திருங்கள். உங்களைப் போலவே தேர்ந்துகொள்ளப்பட்ட பாபிலோன் சபையாரும், என் மகன் மாற்கும் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகின்றனர். அன்பு முத்தம் கொடுத்து நீங்கள் ஒருவர் மற்றவரை வாழ்த்துங்கள். இயேசு கிறிஸ்துவோடு இணைந்து வாழும் உங்கள் அனைவருக்கும் அமைதி உரித்தாகுக!

**பதில்பாடல் :** ஆண்டவரின் பேரன்பைப் பற்றி நான் என்றும் பாடுவேன்

**நற்செய்தி : மாற்கு16 : 15 - 20**

அக்காலத்தில் இயேசு பதினொருவரையும் நோக்கி, ”உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள். நம்பிக்கைகொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப் பெறுவர் நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்புப் பெறுவர்.நம்பிக்கை கொண்டோர் பின்வரும் அரும் அடையாளங்களைச் செய்வர் அவர்கள் என் பெயரால் பேய்களை ஓட்டுவர் புதிய மொழிகளைப் பேசுவர். பாம்புகளைத் தம் கையால் பிடிப்பர். கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் அது அவர்களுக்குத் தீங்கு இழைக்காது. அவர்கள் உடல் நலமற்றோர்மீது கைகளை வைக்க, அவர்கள் குணமடைவர்” என்று கூறினார்.இவ்வாறு அவர்களோடு பேசிய பின்பு ஆண்டவர் இயேசு விண்ணேற்றமடைந்து கடவுளின் வலப்புறம் அமர்ந்தார்.அவர்கள் புறப்பட்டுச் சென்று எங்கும் நற்செய்தியைப் பறைசாற்றினர். ஆண்டவரும் உடனிருந்து செயல்பட்டு, நிகழ்ந்த அரும் அடையாளங்களால் அவர்களுடைய வார்த்தையை உறுதிப்படுத்தினார்.

**தியானம்:** இயேசு இவ்வுலகிற்கு கொண்டு வந்த நற்செய்தி என்ன என்று பார்ப்போமானால் கடவுள் நம்மை அன்பு செய்கின்றார். நாம் கடவுளின் பிள்ளைகளாக இருப்பதனால் கடவுள் காட்டும் வழியில் நடந்து சென்று அவரிடத்தில் நிலையான அமைதியையும், மகிழ்சியையும் கண்டு கொள்ள வேண்டும். கடவுள் உலகின் மீது கொண்ட எல்லையற்ற அன்பினால் தன் ஒரேமகனை நமக்கு மீட்பராக அளித்தார். அவரிடத்தில் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதுவே இயேசு இவ்வுலகிற்கு கொண்டு வந்த நற்செய்தியின் சுருக்கம் ஆகும். இச்செய்தியை இயேசு ஒரு சில மனிதர்களுக்கு மட்டுமே அறிவிக்கப்பட வேண்டிய இரகசியமாகக் கருதவில்லை, மாறாக உலகில் வாழ்கின்ற அனைத்து மக்களுக்கும் இந் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும் என்பதே இயேசுவின் திட்டமாகும். ஆகவே அவர் தம் சீடர்களுக்கு ஒரு முக்கிய கட்டளை கொடுக்கின்றார் “உலகெங்கும் சென்று படைப்பிற்கு எல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்”என்பதே இக்கட்டளையாகும். இயேசுவின் சீடர்களாகிய நாங்கள் ஆற்ற வேண்டிய முக்கியபணி “நற்செய்தி அறிவித்தல்”ஆகும். இது வெறும் வார்த்தைகளால் நடைபெறுகின்ற நிகழ்வு அல்ல மாறாக, நற்செய்தி என்பது வாழ்க்கை முறை. இயேசுவின் போதனையை உள்ளத்தில் ஏற்று அதைவாழ்வில் கடைப்பிடிப்பதே நற்செய்தி அறிவிப்பின் முக்கிய அம்சம். இதனையே நாம் “சான்று பகர்தல்”என்கின்றோம். இயேசுவின் நற்செய்தியை அறிவிக்கும் கருவிகளாக நாமும் செயல்பட இறை அருள் வேண்டுவோம் ஆமென்.